2011
ஆகஸ்ட்

1

**திங்கள்**

காலை

1பேது. 5:1–4

தி. வ.
1பேது. 5 : 3

**“...மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்”**

மாலை

எசே. 34:11–15

சிந்தனை

**கடவுளிடமிருந்து பெரிய காரியங்களை எதிர் பார். கடவுளுக்காக பெரிய காரியங்களைச் சாதிக்கப் பார்.**
–வில்–யம்கேரி

# மந்தைக்கு மாதிரி

மூப்பர்கள், ஆயர்கள், மேற்பார்வையாளர்கள் முன்மாதிரியுடனும் கடமையுணர்வுடனும் வாழ வேண்டுமென்று வலியுறுத்துகிறார் பேதுரு. அவர்கள் மனமகிழ்வுடன், தன்னலமின்றி, கடவுள் மீது முழு நம்பிக்கையுடன், உண்மையாக பணியாற்ற வேண்டும். இத்தகையப் பணி வாழ்வில் இடர்களும், ஆபத்துகளும், சோதனைகளும் நிறைந்தே இருக்கும் என்ற உண்மையையும் பேதுரு அடிகளார் தெளிவாய் விளக்குகிறார். மட்டுமல்ல இச்சூழலில் இறைவனைச் சார்ந்திருபப்து நல்ல மாதிரிக்கு துணைநிற்கும் என்பதே உண்மை (வச.8–9).

கடவுள் ஒவ்வொருவருக்கும் தந்திருக்கிற பொறுப்புக்களை உண்மையாய் நிறைவேற்றி மந்தைக்கு முன்மாதிரிகளாய் இருக்க வேண்டுமானால் நாம் செய்ய வேண்டிய சில காரியங்கள் :

1. தன் நிலையை உணர வேண்டும்.
2. விட்டு கொடுத்து வாழ வேண்டும்.
3. கடவுளுக்குப் பிரியமானவர்களாய் வாழ வேண்டும்.
4. தவறாமல் இறைவேண்டுதல் செய்ய வேண்டும்.
5. இறை உறவில் நிலைத்திருக்க வேண்டும்.

பேராசிரியர் ஒருவர் கூறும் போது “சொல்வது எளிது ஆனால் செய்வது கடினம்” என்றார். ஆம், நாம் சொல்கின்ற காரியத்தை தவறாமல் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். மட்டுமல்ல “தூய்மை நிறைந்த வாழ்வு” சிறந்த மாதிரி. இது புறத்தூய்மை அல்ல, அகத்தூய்மையைக் காட்டுகிறது.

King Fisher என்னும் (மீன் கொத்தி பறவை) பறவை தூய்மையை விரும்புகிறது. இது தண்ணீருக்குள் நீந்திச் சென்று, கரையில் வரும்போது சூரியஒளி படும்படி அமர்ந்துகொள்ளும். இது தன்னுடைய அலகையை மரத்தில் கொத்தி தன்னை தூய்மையாக வைத்துக் கொள்ளும். எனவே நாமும் யோசேப்பை போல பாவத்திற்கு இடம் கொடாமல், தூய்மையான வாழ்வு வாழ்ந்து, நம்மிடம் கடவுள் ஒப்படைத்ததை அடக்கி ஆளாமல் மந்தைக்கு முன்மாதிரிகளாய் இருப்போம்.

**2011**
**ஆகஸ்ட்**
**2**
**செவ்வாய்**

காலை
எசே. 33:1–9

தி. வ.
எசே. 33 : 7
**“...நான் உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவற்காரனாக வைத்தேன்”**

மாலை
மத். 9:1–8

சிந்தனை
**இறைவார்த்தைக்கு கீழ்ப்படிந்தால் இறை ஆசி நிறைவாய் பெற்றிடலாம்.**

# இறைவார்த்தைக்கு கீழ்ப்படிதல்

இஸ்ரயேல் மக்களுக்கு மீட்பளிக்கும் செய்தியைக் கூறும் பகுதி இவ்வதிகாரத்திலிருந்து தொடங்குகின்றது. இந்நூலின் இறுதிவரை இக்கருத்து தொடரும். கடவுள் எசேக்கியேலை இஸ்ரயேல் மக்களின் காவலாளியாக நியமிக்கின்றார். எசேக்கியேல் மக்கள் மனந்திரும்ப அழைப்பு விடுக்கின்றார். கடவுள் மன்னிப்பவர். என்பதையும் உறுதி செய்கிறார். எருசலேமின் அழிவு இங்கும் அறிவிக்கப்படுகின்றது. பாபிலோனியாவுக்கு வந்த ஒருவர் எருசலேமின் அழிவை அறிவிக்கின்றார். எருசலேமின் சுவர்கள் உடைக்கப்பட்டன (எரே. 39 : 2; 52 : 6–7). இது நடந்தது கி.மு. 586–ம் ஆண்டு. ஒரு மாதத்திற்கு பின் எருசலேம் ஆலயம் அழிக்கப்பட்டது (2 அரசர் 25 : 8–9; எரே. 52 : 12). எசேக்கியேல் 24–ஆம் அதிகாரத்தில் மனைவியின் இழப்பால் எசேக்கியேல் பேச்சுத் திறனை இழக்கின்றார். ஆனால், எருசலேமின் அழிவிற்குப்பின் அவர் மீண்டும் பேசும் திறனைப் பெற்றார் என்று கூறப்பட்டுள்ளது (24 : 25–27). புதிய இறைவாக்குகளை உரைப்பதற்காக அவர் மீண்டும் பேச்சுத் திறனைப் பெறுகின்றார்.

கடவுளின் வார்த்தையால் மனிதன் எச்சரிக்கப்படும்பொழுது அவ்வார்த்தைக்கு கீழ்ப்படிகின்றவர்களாக மாற வேண்டும். “மாற்றமில்லாமல் மாறுதலும் இல்லை” என்பது இறையியலாளர் சிந்தனை ஆம்! மனித வாழ்வில் ஏற்படுகின்ற மாற்றம் தான் நல்ல மாறுதல்களைக் கொண்டு வருகின்றது. இதற்கு நாம் சில சவால்களை சந்தித்தே ஆக வேண்டும். ஆல்பிரட் என்பவரின் சிந்தனை, “நீ சவால்களை சந்திக்கும் போது தான் உன்னில் ஒளிந்திருக்கிற திறமைகளை உணர்வாய்” என்பது. எனவே, நாம் சவால்களை சந்தித்து, இறைவார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நம்மில் ஒளிந்திருக்கின்ற திறமைகளை வெளிப்படுத்துவோம். “உண்மையான வாழ்வு உயர்வை தரும்” என்றபடி, நாமும் கடவுளுக்கு பயந்து உண்மையுடனும், நேர்மையுடனும் வாழ்வோம். எல்லாவற்றிற்கும் மேலாகக் கடவுளைச் சார்ந்து நல் உறவை வெளிப்படுத்துவோம்.

2011

ஆகஸ்ட்

3

**புதன்**

காலை

யாத். 3:1–12

தி. வ.

யாத். 3 : 10

**“நீ இஸ்ரவேல் புத்திரராகிய என ஜனத்தை எகிப்தி–ருந்து அழைத்து வரும்படி... பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா”**

மாலை

மத். 28:16–20

சிந்தனை

**வாழ்வு தருபவர் நம்மை வாழ வைக்கின்றார். விடுதலை தருபவர் நம்மை விடுவிக்கின்றார்.**

மன்னா சேர்ப்போம்

# விடுதலை தரும் கடவுள்

மோசே குடும்பத் தலைவராக, மந்தைகளை மேய்ப்பவராக துன்புறும் தம் இனத்தவரிடமிருந்து தொலைவில் வாழ்கின்றார். துன்பங்களைத் தவிர்த்து சுகமாய் வாழவேண்டும் என்பதே அவரது விருப்பம். ஆனால் கடவுள், துன்புறும் ஆண்டவராய் துன்புறும் மக்களுடன் இணைந்தே வாழ்கின்றார். துன்புறும் மக்களை விடுவிக்கவே அருகில் இருந்து செயல்படுகிறார். எரியும் நெருப்பின் நடுவில் கடவுள் தோன்றுகின்றார். கடவுள் தாம் யார், தம் பெயர் என்ன என்பதை என்று மோசேக்கு கூறுகின்றார். கடவுள் அனைத்தையும் கடந்தவர், மனித அறிவுக்கு எட்டாதவர், “யாவே” என்பது அவர் பெயர். இயேசுவின் பிறப்புக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த இஸ்ரயேல் மக்கள் கடவுளின் பெயரை உச்சரிக்க அஞ்சி “அதோனாய்”, “ஆண்டவர்” என்று அவரை அழைத்தனர்.

“பாலும் தேனும் பொழியும் நாடு” என்பது வாக்களிக்கப்பட்ட நாட்டின் வளமையைக் குறிக்கும். விடுதலை என்பது தனி மனிதரின், குடும்பத்தின், சமூகத்தின் முழு விடுதலை. அதுவே திருமறை காட்டும் விடுதலை. கடவுள் விடுதலைப்பணிக்காய் மோசேயை அழைத்தார். எகிப்தி ருந்து இஸ்ரயேலரை அழைத்துவர பார்வோனிடம் அனுப்புவேன் வா! என்றார். மோசே தலைவராக, தம் மக்களை விடுவிப்பாராக முழு பொறுப்பேற்கிறார்”.

“கூண்டிற்குள் இருக்கும் பறவை சுதந்திரமாக பறக்க இயலாமல் இருக்கும்போது, பறவையை வெளியே பறக்க விட்டால் சுதந்திரமாக பறந்து சென்று விடுதலை கிடைத்தது என்ற மகிழ்வோடு கடந்துச் செல்கிறது”. அதே போன்று தான் இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் பிடியி ருந்து மோசேயின் வழியாய் கடவுள் விடுதலைக் கொடுத்தவுடன் சுதந்திரமாகப் பாலும், தேனும் பொழியும் நாட்டிற்கு நேராய் வழிநடத்தப்படுகிறார்கள். கடவுள் எவரையும் உற்ற உறவாய் கொள்ளுகிறவர், வாழ்வு தருகிறவர் என்பதை நாம் மறந்து போகாமல் நம் வழிகளிலெல்லாம் கடவுளை நினைத்து (நீதி. 3 : 6) அவர் தருகின்ற விடுதலையைப் பெற்றுக்கொள்வோம். ஏனெனில் நம் கடவுள் விடுதலை தரும் கடவுள்.

2011

ஆகஸ்ட்

4

**வியாழன்**

காலை

1தீமோ. 3:1–16

தி. வ.

1தீமோ. 3 : 1

**“கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்.”**

மாலை

நீதி. 2:11–22

சிந்தனை

**அர்ப்பணிப்புடன் பணிவிடை செய்யும் ஒருவரே ஆண்டவரின் சிறப்புக்குரிய பணியாள்.**



# சபை மேய்ப்பர்

*ஆதி திருச்சபை வளர்ச்சியடைந்தபொழுது சபையை வழிநடத்துவதற்கு பேராயர் அல்லது போதகர் மற்றும் உதவிக்காரர் நியமிக்கப்பட்டனர். பவுல் தான் நற்செய்தி அறிவித்தல் பகுதிகளில் பேராயர் அல்லது போதகர் மற்றும் உதவிக்காரர்களை நியமிக்கும்படி சொல்லுகின்றார். அதற்கான தகுதிகளையும் அவர் சொல்லுகின்றார்.*

***1) தனி வாழ்வில் தூய்மை :***

*1 தீமோ, 3 : 8 இல் கீழ் குறிப்பிடும் செயல்கள் தகாததாக குறிப்பிடப்பட்டுள்ளது.*

- i) *இரு நாக்குள்ளவர்களாயிருக்க கூடாது. இடத்துக்கு இடம் வேறுபட்டு பேசுதல்.*
- ii) *மதுபான பிரியராயிருக்க கூடாது.*
- iii) *இழிவான ஆதாயத்தைத் தேடுகிறவர்களாயிருக்கக் கூடாது.*
- iv) *நல்லொழுக்கம் உடையவர்களாயிருக்க வேண்டும்.*

***2) குடும்ப வாழ்வில் தூய்மை :***

*சபையை வழிநடத்துகின்றவர்கள் தங்கள் குடும்ப வாழ்வில் பிறருக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று 1 தீமோ. 3 : 12 இல் குறிப்பிடப்படுவது யாதெனில்,*

- i) *ஒரே மனைவியை உடையவராய் இருக்க வேண்டும்.*
- ii) *தங்கள் பிள்ளைகளையும், குடும்பத்தையும் நன்றாய் பராமரிக்க வேண்டும்.*

***3) ஆன்மீகத் தகுதி :***

*1 தீமோ. 3 : 9, 10 இல் பின்வரும் ஆன்மீகத் தகுதிகளை பற்றி குறிப்பிடுகிறார்.*

- i) *விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனசாட்சியிலேக் காத்துக் கொள்ளவேண்டும்.*
- ii) *குற்றம் சாட்டப்படாதவர்களாயிருக்க வேண்டும்.*

*மேற்கூறிய தகுதி உடையவர்களை சபைத் தரைவர்களாக நியமிக்க பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனைச் சொல்லுகிறார். சபைத் தலைவர்கள் தனி வாழ்விலும், குடும்ப வாழ்விலும், ஆன்மீக வாழ்விலும், ஒழுக்கமுடையவர்களயிருத்தல் மிகவும் அவசியம்.*

# இறைவனிடத்தில் திரும்புதல்

2011

ஆகஸ்ட்

5

**வெள்ளி**

காலை

எரே. 1:4–19

தி. வ.

எரே. 1 : 19

**“உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்.”**

மாலை

மத். 11:1–10

சிந்தனை

**இறைவனிடம் திரும்புதல் இருளகற்றி இறவாப் புகழ்தரும்**

இஸ்ரயேல் மக்கள் கடவுளின் வழியை விட்டு விலகி, பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்து அவர் கோபத்திற்கு ஆளானார்கள். கடவுள் எரேமியா தீர்க்கத்தரிசி மூலமாக தன்னிடத்தில் திரும்ப அழைப்பு விடுக்கிறார். தவறை உணர்ந்து தன்னிடத்தில் திரும்பவில்லையென்றால் அதற்கான தண்டனையையும் கூறி எச்சரிக்கிறார். மட்டுமல்ல இறைமக்களை இறைவனிடம் திரும்பும்படி அழைக்கும் அறைகூவ□ன் பணியில் “உன்னை நான் மீட்டுக்கொள்ளும்படி உன்னுடனே இருக்கிறேன்” என்று உறுதிமொழியாய் சொல்லுகிறார் கடவுள் இஸ்ரயேல் மக்கள் தன்னிடத்தில் திரும்ப எரேமியா மூலமாகச் சொன்ன காரியங்களைச் சிந்திப்போம்.

**அருவருப்புகளை அகற்றுங்கள் :**

இஸ்ரவேல் மக்கள் கர்த்தருக்கு முன்பு அருவருப்பான காரியங்களைச் செய்தார்கள். *(எரே. 4 : 1)* எவை கர்த்தருக்கு அருவருப்பானவைகள்?

i) விக்கிரகங்கள் கர்த்தருக்கு அருவருப்பானது *(உபா. 7 : 25)*.

ii) தேவன் இல்லை என்கிறவர்கள். *(சங். 14 : 1)*.

iii) கர்த்தருடைய வசனங்களைக் காத்துக் கொள்ளாதவர்கள். *(சங். 119 : 158)*.

iv) துன்மார்க்கனுடைய ப□, வழி ஆகியவை கர்த்தருக்கு அருவருப்பானவைகள். *(நீதி. 15 : 8, 9)*.

v) மனமேட்டிமை உடையவன். *(நீதி. 16 : 5)*.

மேற்கூறியவை கர்த்தருக்கு அருவருப்பானக் காரியங்கள். இவை இஸ்ரயேல் மக்களிடத்தில் காணப்பட்டது. இதனிமித்தமாக கர்த்தர் இஸ்ரயேல் மக்களைத் தண்டித்தார். இந்த தவறுகளை விட்டுத் திரும்பி வருமாறு இஸ்ரயேல் மக்களைக் கடவுள் எரேமியா மூலமாக அழைக்கிறார். இந்த அழைப்பினை இறைமக்களாகிய நாம் ஏற்க கடமைப்பட்டுள்ளோம். அருவருப்பானவைகளை நம்மைவிட்டு அகற்றி இறைவனிடம் திரும்புவோம் உடனிருந்து நம்மை மீட்டு உயர்வாழ்வினை வழங்கிடுவார்.

2011

ஆகஸ்ட்

6

**சனி**

காலை

லூக். 9:28–36

தி. வ.
லூக். 9 : 29

**"...ஜெபம் பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று... வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது"**

மாலை

நீதி. 3:13–20

சிந்தனை

**இறைமகன் ஒளிர்ந்தார் இறைமக்கள் வாழ்வு ஒளிர**

# இறைமகனுக்கு செவிசாய்த்தல்

*"கறைபடி வாழ்வில், அறிவிலா நிலையில்
குறை உடை மாந்தர் நிறை உடை தரணியில்
காசு உரியோர்க்கு தூசு அகற்றப்
பேசு துடைப்பம் ஆசு இரியர் எனல் மாறி
நல்லறிவு, நன்முறை, நன்மதிப்பு இஃது
வாழ்வின் அர்த்தம் என்பதைப் புரிந்து
அறியா இருள் அகற்றி, அறிவு ஒளி ஏற்றி
அறிவார்ந்த முறையில் செயலுற,
தேர்ந்திடுங்கள் என் மகனை,
சாயுங்கள் செவியை, கேளுங்கள் வார்த்தையை
காணுங்கள் பாடுகளை,
கற்றிடுங்கள் உண்மையை"*

என்று இறைவன் அறைகூவல் கொடுக்கக் காரணம் என்ன என்று, நம் உள்மனம் கேட்கும் இனிய வினாவிற்கு உரிய விடையை திருமறை வழி கற்றுத் தெளிவோம்.

"மலர்படுக்கை" தான் வாழ்வு என்று புரிந்த பேதுருவைப் போன்ற மானிடர்க்கு "முள்நிறை பாதை" தான் வாழ்வு என்பதை என் புதல்வன் தன் வாழ்வினூடாய்க் கற்றிட செவிசாயுங்கள் என்பது இறைவனின் விழைவு. இதன் விளைவு, "சதைப்புண்டத் திருமேனியும் பன்னரிய பல பாடும்". மட்டுமன்று, "மலை உயர் வாழ்வை உரிமையாக்க நினைத்த பேதுருவாம் சீடர் நமக்கு உரிமையற்றதை நாடாது நீ உனக்குரியதை நாடு" என்பதை நீக்கமறக் கற்க, செவிப்பறையைத் திறந்து, ஒ ப்பறையை ஏற்று, அறியாமைக்கு விடையளித்து, வாழ்வில் புகழ்படுமாறு வாழ வேண்டும் என்பது இறைவனின் ஆவல்.

ஆசு குறை, இரியர் நீக்குபவர். ஆக குறை நீக்கி நிறைவைத் தரும் ஆசிரியராம் கிறிஸ்துவுக்கு செவிசாய்த்துக் கற்றுத் தெளிவுறுவோம். நிறைவைப் பெற்றிடுவோம். வாழ்வில் உயர்ந்திடுவோம்.

இறைவனின் விருப்பம் இனிதே நிறைவேற்றிட இறைவனுடன் இணைந்த வாழ்வே இதமானது. இறைவனோடு இணைந்த இறைமகன் இறைவனிடம் மன்றாடியபோது முகரூபம் மாறிற்று, வஸ்திரம் பிரகாசித்தது. இறைமக்களின் வாழ்வும் ஒளிர்ந்தது. இறைமகனுக்கு செவிசாய்த்து ஒளிமிகு வாழ்வடைவோம்.

# கிறிஸ்து வாழ்வின் மாதிரி

2011
ஆகஸ்ட்
7
**ஞாயிறு**
**அருட்பணி ஞாயிறு**

காலை
யோ. 13:1–17

தி. வ.
யோவா. 13:14
**“நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக் கடவீர்கள்”**

மாலை
நீதி. 3:21–35

சிந்தனை
**கிறிஸ்துவின் மாதிரி நம் வாழ்வுக்கு மாதிரியாகட்டும்.**

மன்னா சேர்ப்போம்

“நான் அந்த அறிவியல் அறிஞரைப் போல், இந்த விளையாட்டு வீரரைப்போல் அல்லது அந்த நடிகரைப் போல் வாழ வேண்டும்” என்று நினைத்து இன்றைய மக்கள் வாழ்கின்றனர். இவ்வாறு மனிதன் மனிதனை மாதிரியாகக் கொண்டிருப்பது, குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவதைப் போன்றதே. இதனால் வாழ்வும் “ஒரு மாதிரி” ஆகிவிடுகின்றது. பஸ்கா விருந்தில் தம் சீடர்களின் கால்களைக் கழுவிய இயேசு, நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் என்று அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்.

> “பிறர் உங்களுக்கு மாதிரியாக அல்ல,
> நீங்கள் பிறருக்கு மாதிரியாக இருக்க
> நானே உங்களுக்கு மாதிரி” (Role Model)

என்பது கிறிஸ்து தம் சீடருக்குக் கற்றுக் கொடுத்த வாழ்வின் தகவு. நான் உங்கள் வாழ்வின் தலைவராக ஆண்டவராக, போதகராக, எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருந்த போதும் நான் உங்களுக்குப் பணிவிடையாற்றினாற் போன்று நீங்களும் உங்களைப் பணிவிடையாளராக்கும் குணம் தேவை. அதற்கு நீங்கள் செயல்வடிவம் கொடுக்க வேண்டும் என்பதே இறைவனின் கோட்பாடு. திசைக்காட்டும் தீபஸ்தம்பமாகிய கலங்கரை விளக்கைக் கண்டு பயணிக்கும் கப்பலைப் போன்று, ஒளியாம் கிறிஸ்துவை வாழ்வில் கொண்டு, நாம் வாழ வேண்டும். கலங்கரை விளக்கைக் கண்டு பாதையை அமைக்காவிட்டால் கப்ப ன் கதி அவ்வளவுதான். அதுபோல கிறிஸ்துவின் மாதிரியைக் கொண்டு வாழ்வமைக்காவிட்டால் வாழ்வுப் பயணம் உடைந்து சிதறிவிடும்.

ஆகையால் “ஒவ்வொருவரும் அனைவருக்காக, அனைவரும் ஒவ்வொருவருக்காக” என்னும் போங்கில் கிறிஸ்துவின் அறவுரைப்படி செயல்பட வேண்டும். அகந்தை, ஆணவம், வறட்டு கௌரவம் இவற்றைக் களைந்து, அன்பு, அமைதி, பணிவு இவற்றை அணிந்து, கிறிஸ்துவையும் அவர்தம் வாழ்வு, பணி இவற்றை முன்னிறுத்தி, மாதிரியாக்கி, நம்மை ஒளிர்வித்து பிறருக்கு ஒளிபகிர்வோம்.

# இறைவனின் வீட்டில் உண்மையுள்ளவன்

2011

ஆகஸ்ட்

8

**திங்கள்**

காலை

எண். 12:1–8

தி. வ.

எண். 12 : 7

**“என் தாசனாகிய மோசேயோ ...என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்”**

மாலை

எபி. 3:1–6

சிந்தனை

**உண்மை உயர்வுதரும் உண்மையுள்ளவன் உலகுக்குச் சான்றாவான்.**

*“கள்ளமில்லா பிள்ளையின் வெள்ளை உள்ளத்தில் இறைவன் பள்ளி கொள்கிறார்” என்பது முன்னோர் அருள்வாக்கு. இறைவாக்கினர்க்கோ, இறைப்பணியாளருக்கோ மட்டுமல்லாது, சூது, வாது, தீது ஏதுமறியா சிறு பிள்ளையைப்போன்று உண்மையோடு செயல்படும் பிஞ்சு நெஞ்சம் உடைய மனிதனுக்கு இறைவன் எப்போதும் தன்னை வெளிப்படுத்தி அருள்பாவிக்கிறார். இப்படி இறைவனிடம் எந்நிலமையிலும் உண்மையாய் செயல்படும் ஒரு மனிதனுக்கு தன் அருள் வழங்கும் கடவுள்அதோடு நின்றுவிடாது, இவன் உண்மையுள்ளவன், என் இதயத்திற்கு ஏற்றவன் என்று உலகுக்கு சான்று பகருகிறார்.*

*மோசேயின் உண்மை, உத்தமம் இவற்றை மெச்சிய இறைவன் தாமே மோசேக்கு நேரடியாய்ப் பிரத்தியட்சப்பட்டதுமன்றி, மோசே உண்மையுடையோன் என்பதை வெளி உலகிற்குப் பகிரங்கப்படுத்துகிறார். அதுமட்டுமன்று, மோசேயை பகைத்துரைத்த உடன்பிறப்புக்களாகிய மிரியாம், ஆரோன் ஆகியோரின் வார்த்தைகளையும், முறுமுறுப்பான செயல்களையும் கண்ணுற்ற இறைவன் அவர்களுக்குத் தண்டனை கொடுத்து, இறைவனுக்கு ஏற்றவனைப் பகைப்போர்க்கு இறைவனே பரிகாரி என்பதைத் தெளிவுப்படுத்துகிறார்.*

*ஆக, இறைவன் எனக்குக் காட்சி தந்தார், என்னிடம் பேசினார் என்று வாய்ச்சவால்களையும், ஆருட வார்த்தைகளையும் அள்ளித் தெளிக்கும் மக்கள் மத்தியில் வாழும் நமக்கு உண்மையாய் வாழ்ந்தால் இறைவனை உணரலாம் என்பதே மோசேயின் வாழ்வினூடாய் கடவுள் நமக்குக் கற்றுத்தரும் அருள்வாக்கு. நாமும் நம் பேச்சு, செயல், சிந்தை இவைகளில் பிறருக்கு நன்மையைக் கொடுக்கும் எண்ணம் கொண்டு உண்மை உடையோராய் செயல்படுவோம். இறையருளைப் பெற்று, இறைவனால் சான்று பகரப்பட்டு, இறைவனே நம் பரிகாரியாக செயலுற நம்மைத் தகுதிப்படுத்துவோம். இறையருளோடு வாழ்வோம்.*

# இறையருள் பெறுதல்

2011
ஆகஸ்ட்
9
**செவ்வாய்**

காலை
எபே. 2:1–10

தி. வ.
எபே. 2 : 10
**“...நற்கிரியைகளைச் செய்கிறதற்கு...கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்”**

மாலை
நீதி. 4:10–19

சிந்தனை
**பாவத்திற்கு விலகி பரிசுத்தமாக்கப்படுதல்.**

மன்னா சேர்ப்போம்

ஆதாம், ஏவாள் ஏதேன் தோட்டத்தில் செய்த பாவம் இன்று வரை மனுக்குலத்தைத் தொடர்கிறது. பாவத்திலிருந்து விடுதலை பெற ஒரே வழி இயேசு மட்டுமே. அவர் தன்னை அன்பின் ஈவாக இந்த உலகிற்கு தந்தது கடவுளின் ஈவு ஆகும். ஏனென்றால் நாம் அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தோம். கீழ்படியாமையில் நடந்து கொண்டிருந்தோம். புத்திமதியை பற்றிக் கொள்ளவில்லை. மாமிசமும், மனதும் விரும்பினதைச் செய்தோம். எனவே தன்னை அன்பின் ஈவாகத் தந்து நம்மை மீட்க எண்ணினார். பாவத்தில் மரித்தவர்களாயிருந்த நம்மை உயிர்ப்பிக்க, அவர் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் இருந்தபடியாலும், நாம் நற்கிரியைகளை செய்கிறதற்கு கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறபடியால், அவைகளில் நாம் நடக்கும்படியாகவும், தன்னை ஈவாகத் தந்தார்.

நீதிமான்களுடையப் பாதை நடுப்பகல் வரைக்கும் பிரகாசிக்கும் சூரியப் பிரகாசம் போல மாறுவதற்குச் சரீரத்தில் செத்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனே கூட பாவத்திலிருந்து விடுதலையாக்கி உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்படச் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம். இது எந்த மனுஷனாலும் உன்டானது அல்ல. கடவுளுடைய ஈவு. இதில் ஒருவருக்கும் பெருமை பாராட்டவும் இடமில்லை. நற்கிரியையின் மூலம் கடவுளுடைய ஈவை வெளிப்படுத்தியிருக்கிறார்.

எனவே நாமும் பாவத்திலிருந்து விடுதலைப் பெற்று, புது ஜீவனுள்ளவர்களாய், நற்கிரியைகளைச் செய்து உன்னதங்களில் உட்கார அன்பின் ஈவைப் பெற்றுக்கொண்டு, கடவுளின் வார்த்தையை ஏற்றுக் கொண்டு அதை காத்து செவ்வையான பாதையிலே நடக்க வேண்டும். (நீதி. 4 : 10) புத்திமதியை உறுதியாய் பற்றிக் கொண்டு தீமையான பாதையை வெறுத்து வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து நித்திய ஜீவனாகிய கடவுளின் ஈவைப் பெற்றுக் கொள்வோமாக.

# நற்செய்தியின் பலன்

2011
ஆகஸ்ட்
10
**புதன்**

காலை
1கொரி. 9:18–27

தி. வ.
1கொரி. 9:22
**“...எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்”**

மாலை
நீதி. 4:20–27

சிந்தனை
**ஆத்தும ஆதாயம் செய்து அழியாத கிரீடம் பெற நாடுதல்**

மன்னா சேர்ப்போம்

அப்போஸ்தலனாகிய பவுல் நற்செய்தியைக் கூறுவது தன் கடமையாக உணர்ந்து உற்சாகமாய்ச் செய்வதற்குத் தூண்டுகிறார். நற்செய்தியை அறிவிப்பதில் தன்னை ஒரு அடிமையாக எண்ணுகிறார். ஒருவருக்கும் அடிமைப்படாத நிலையில் நற்செய்திக்காகத் தன்னை நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவனைப் போலவுமானார். மேலும் எந்த நிலையில் இருப்போரையும் கிறிஸ்துவண்டை கொண்டுவர எல்லாருக்கும் எல்லாமானேன் என்கிறார். அந்த நற்செய்தியின் பலன் என்ன அதைப் பெற்றுக்கொள்ள என்னச் செய்ய வேண்டும் என்று இன்றைய தியான பகுதி விளக்குகிறது.

நற்செய்தி அறிவிக்கின்றவர்களுக்கு பல பாடுகளுண்டு. பவுல் தன்னை எல்லாவற்றிற்கும் அர்ப்பணித்து நற்செய்திப் பணியை நிறைவேற்றுகிறார். ஏனென்றால் அதன் பலனைப் பெற்றுக் கொள்ளுவேன் என்று நம்பினார். பவுல் எதிர்ப்பார்க்கிற பலன் என்ன 1 கொரி. 9 : 25 இன் படி “அழிவில்லாத கிரீடம்” உலகப் பிரகாரமாக கிடைக்கின்ற எந்தப் பரிசுப் பொருட்களும் அழிந்து போகும். பெரிய விளையாட்டு வீரர்களாக இருந்தாலும் அவர்கள் பெறுகின்ற விலையுயர்ந்தப் பரிசுப் பொருட்கள் அனைத்தும் அழிவுக்குரியவை. ஆனால் நற்செய்திகள் வழியாக நமக்கு கிடைக்கின்ற கிரீடம் அழியாத ஒன்று ஆகும். அழியாத கிரீடத்தைப் பெற நாம் செய்ய வேண்டியது என்ன? 1கொரி. 9:24 இல் பந்தயச் சாலையில் ஓடுகிறவர்கள் எல்லாரும் ஓடுவார்கள். ஆனால் ஒருவன் மாத்திரமே பரிசைப் பெறுவான். நாமும் பெற்றுக் கொள்ளத் தக்கதாகவே ஓட வேண்டும்.

நற்செய்திப் பணியை உண்மையோடு செய்ய வேண்டும். நற்செய்தி அறிவிக்கப்படாத இடங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட நம்முடைய பங்களிப்பை முழுமையாய் தந்து செயல்படல் வேண்டும். நம்மூலமாக பலரை கிறிஸ்துவிடம் கொண்டு சேர்க்கத்தக்கதாக ஓட வேண்டும். இறை வார்த்தைகளை கடைபிடிக்க வேண்டும். கருத்தாய் போதிக்க வேண்டும் (நீதி. 4 : 21, 22). “இறை வார்த்தைகள் வாழ்வும் அவைகள் உடலுக்கு ஆரோக்கியமும் ஆகும். திருமறை காட்டும் ஜீவ பாதையில் அழியாத ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்வோம்.

2011
ஆகஸ்ட்
11
**வியாழன்**

காலை
நியா. 5:9–18

தி. வ.
நியா. 5 : 13
**"கர்த்தர் எனக்குப் பராக்கிரமசா–களின் மேல் ஆளுகை தந்தார்"**

மாலை
மத். 13:1–23

சிந்தனை
**அர்ப்பணமும் துணிவும் விடுதலைத் தேட–ன் முழுமையைத் தரும்.**

மன்னா சேர்ப்போம்

# அர்ப்பணமும் துணிவும்

நியாயாதிபதிகள் இஸ்ரயேல் மக்களை நீதியாய் விசாரித்து தெளிவான பாதையில் நடத்தினவர்கள். இஸ்ரயேலரின் பாவம் அவர்களைப் பலமுறை சிறியிருப்புக்கும், அடிமை வாழ்வுக்கும் இட்டுச் சென்றது. அவர்களின் வாழ்வோடு உடன் இருந்த ஆண்டவர் சிறையிருப்புகளி ருந்து விடுவிக்க தலைவர்களைத் தேர்ந்தெடுத்து ஆற்றல் கொடுத்து உரிமை வாழ்வை அவர்களுக்குச் சொந்தமாக்கினார்.

கானான் நாட்டின் மன்னன் யாசேனின் படைத்தளபதி சிசெராவால் சிறைவாழ்வில் அனுபவத்திற்கு இஸ்ரயேல் மக்கள் நடத்தப்படும் சூழல் ஏற்பட்டது. கடவுள் தெபோராள் என்னும் பெண் தீர்க்கர் உதவியால் அவர்களை விடுவிக்கும் வழிகாட்டுதலைக் கொடுத்தார். பாரக் தெபோராளிடம் ஆலோசனைக் கேட்டபோது நிச்சயம் சிசெராவின் கைக்கு மக்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற உறுதிப்பாட்டைக் கொடுக்கிறார். மட்டுமல்ல தெபோராள் பாராக்குடன் சென்று செசராவை முறியடித்து இஸ்ரயேலருக்கு வெற்றியைத் தேடித் தருகிறாள்.

வெற்றியின் மேன்னையையும், விடுதலையின் வாழ்வையும் பெற்றுக்கொண்ட தெபோராள் கடவுளைப் புகழ்ந்து பாடுகிறாள். கடவுள் எனக்கு பராக்கிரமசா களின் மேல் ஆளுகைத் தந்தார் (நியா. *5 : 13*) என்று இறைவனின் செயலைப் புகழ்கிறார். துணிச்சலுள்ள தீர்க்கத்தரிசினியாய் அர்ப்பணத்தோடு செயல்பட்டார் தெபோராள். இஸ்ரயேலரின் இக்கட்டானச் சூழ ல் இறைவனின் வழிகாட்டுதலை இறைமக்களுக்குச் சொன்னார். தானே முன்னின்று எதிரிகளை எதிர்கொள்ளத் துணிந்தார். இஸ்ரயேலரை மீட்பதற்காய் இறைவன் ஆற்றல் கொடுத்தார். இறையாற்றல் இன்றும் அனைவருக்கும் தரப்பட்டிருக்கிறது. அர்ப்பணமும் துணிச்சலும் இன்று இறைமக்களுக்குத் தேவை. இறைவனைச் சார்ந்த வாழ்வு தேவை. உண்மையும் நீதியும் நிறைந்த பார்வைத் தேவை. கடவுளுக்குப் புகழ்பாடும் நாவுகள் தேவை. அர்ப்பணத்துடன் செயல்பட்டு மீட்புக்கு வழிகாட்டுவோம்.

# பணியில் பொறுப்பாண்மை

2011
ஆகஸ்ட்
12
**வெள்ளி**

காலை
2தீமோ. 4:1–6

தி. வ.
2தீமோ. 4 : 5
**“நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு”**

மாலை
நீதி. 6:1–5

சிந்தனை
**தெளிவும் உண்மையும் இறைபணிக்கு இன்றியமையாதவை.**

மன்னா சேர்ப்போம்

*திருப்பணி என்பது அனைவருக்கும் இறைவன் தந்திருக்கும் அன்புக் கட்டளை. ஆனால் நமக்கு தரப்பட்ட பொறுப்பை கடவுளுக்கு பிரியமாக செய்ய வேண்டுமென்ற மனத்தெளிவு வேண்டும். மனத்தெளிவுடன் இறைவனுக்குச் செய்யும் பணியில் பொறுப்பாண்மை எதிர்பார்க்கப்படுகிறது. மனத்தெளிவு இல்லாத செயல்பாடுகளும் தெளிவற்றவைகளாகவே இருக்கும். எடுத்துக்காட்டாக, எல்லா கிரியைகளுக்கும் கடவுள் நியாயம் விசாரிப்பார் என்பதை அறிந்து கொள்ளாமல் இருப்பது, ஆரோக்கியமான உபதேசத்தை ஏற்று வாழ மனதில்லாமல் வாழ்வது மற்றும் அர்ப்பணிப்பு அற்ற செயல்பாடுகள் எனலாம் (அப். 9 : 1– 5).*

*மீட்பைப் பற்றியும் கிறிஸ்துவைப் பற்றியும் மனத்தெளிவு இல்லாமல் இருந்தபடியினால்தான் ஆதித்திருச்சபையில் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களை அழித்துவிட தீர்மானித்தார் பவுலடியார். அதிகாரத்துடன் சென்ற பவுலை ஆண்டவர் தமஸ்கு பாதையில் சந்தித்தார் பவுல் மனத்தெளிவு பெற்றார். எனவே இப்பொழுது தீமோத்தேயுவுக்கு தான் பெற்ற அனுபவத்தினைக் கற்றுக் கொடுக்கிறார். சமயப்புரட்சியும், மாறுபட்ட போதனைகளும் நிறைந்த சூழ‍ல் திருப்பணியைச் செய்துகொண்டிருக்கிற நீ மனத்தெளிவு உள்ளவனாயிரு. உனக்கு கிடைக்கிற சமயத்தைப் பயன்படுத்தி திருப்பணியை நிறைவேற்று எனக் கூறுகின்றார். பணியில் பொறுப்பாண்மை அனைத்து நிலையிலும் எதிர்பார்க்கப்படுகிறது.*

*தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல் ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான் என நீதி. 22 : 29– இல் செல்லப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தை எத்தனை உண்மை என்பதனை நமது பணியில் அனுதினம் உணர்வோம். உண்மையான பொறுப்புணர்வுடன் திருப்பணிகளை நிறைவெற்றி இறைத்திட்டத்தை காத்திடுவோம் இறையருளும் பெற்றிடுவோம்.*

2011

ஆகஸ்ட்

13

**சனி**

காலை

எஸ்றா. 3:1–9

தி. வ.

எஸ்றா 3 : 9b

**“... அவர்கள் சகோதரராகிய லேவியரும் ஒருமனப்பட்டு நின்றார்கள்”**

மாலை

மத். 15:1–6

சிந்தனை

**ஒரு மனமும் பொறுப்புணர்வும் உயர்வான வளர்ச்சிக்கு உணவாகும்.**



# பணிப் பொறுப்பும் ஒரு மனமும்

*மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டபடி இஸ்ரயேல் மக்களால் பலி பீடங்கள் கட்டப்பட்டு முறையான பலிகள் செலுத்தப்பட்டன (எஸ்றா. 3 : 1–5).*

*குறிப்பாக இங்கே எருசலேமில் ஒன்றாகக் கூடினார்கள். எழுதினபடிதான் பலி செலுத்தப்பட்டது. ஆனால் முறையான ஒழுங்குகள் இருந்தும் குறுகிய முறைகளில்தான் செயல்பாடுகள் இருந்தன. அழிக்கப்பட்ட ஆலயத்தைக்குறித்த கரிசனையுடன் செயல்படுவதில் தயக்கம் காட்டினார்கள். ஆனால் எஸ்றா போன்ற தீர்க்கர்களின் வழிகாட்டுதல் அவர்களை உற்சாகப்படுத்தியது. எஸ்றா 3 : 6–9– இல் ஆலயம் கட்டுவதற்கு கோரேஸ் என்ற பெர்சிய மன்னனின் ஆதரவுடன் ஒருமனப்பட்டு நின்றார்கள். இஸ்ரயேல் கோத்திரத்தார் பலரும் இணைந்து ஆலயம் கட்ட தங்கள் பங்களிப்பைக் கொடுத்தார்கள். எனவே, பொறுப்பாளர்களிடம் ஒருமனம் இருந்தாலும் போதாது. அது பரந்து விரிந்த காட்சியுடன் அவசிய தேவைகளை உணர்ந்து கரிசனையுடன் செயலாற்றுவது சிறப்புடையது.*

*பலி பீடம் கட்டி குறுகிய அளவில் பலி செலுத்துவது அல்ல. ஆலயம் கட்டி அனைவரும் வந்து ஆராதிக்கிற அளவில் செயல்படுவதே சிறப்புடையது. இன்று பேராயமாக DMPB சார்பாக தூரக் காட்சியுடன் மலைநாட்டு மக்களுக்காக மிஷனெறிகள் அர்ப்பணத்தோடு இறைபணியாற்றி வருகிறார்கள். அங்கு கல்வி வசதி, மருத்துவ வசதி ஆலய வசதி, செய்து கொடுக்கிறோம். இந்த மாபெரும் பணியிலே (மத். 28 : 18–20). கடவுளின் கட்டளை ஒருமனதோடு நிறைவேற்றப்படுகிறது. இதில் எனது பங்கு உண்டா? கிறிஸ்து இயேசுவின் பிள்ளைகளான நம்முடைய பங்களிப்பு திருச்சபையின் வளர்ச்சிப் பணியில் ஒருமனதுடன் இருக்கிறதா? எஸ்றா தீர்க்கர் காலத்து மக்கள் போன்று ஒருமனப்பட்டு இறை பணியில் கடவுளை முன்னிறுத்தி கரம் கோர்த்து நிற்போம் திருச்சபை திருப்பணிகள் வளர துணை நிற்போம். இறையாட்சி மலரட்டும்.*

2011
ஆகஸ்ட்
14
**ஞாயிறு**

காலை
மாற். 10:1–9

தி. வ.
மாற். 10 : 8
**"...அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்"**

மாலை
நீதி. 6:12–19

சிந்தனை
**இசைந்த வாழ்வே இறைவன் விரும்பும் இதமான குடும்பம்.**

மன்னா சேர்ப்போம்

# ஆண்டவர் விரும்பும் குடும்பம்

*இறைவன் நமக்குத் தந்த உன்னத ஆசீர்வாதம் குடும்பம். குடும்பம் கடவுளால் அருளப்படுகின்ற அரும் கொடை. விண்ணுலகிலும், மண்ணுலகிலும் உள்ளக் குடும்பத்திற்கு காரணர். கடவுள் என திருமறை தெளிவுப்படுத்துகிறது. எனவே மனுக்குலம் இந்த குடும்ப உறவைத் தூய்மையாக அமைத்துக் கொள்வதும், குடும்பத்தின் தலைவராய் இருக்கின்ற இறைவனுக்கு நன்றி சொல்� சான்று பகர்ந்து வாழ வேண்டியதும் அவசியமாகும். அநேக இல்லங்களில் இவ்விதமான வாசகம் வைக்கப்பட்டிருக்கும் "கிறிஸ்துவே குடும்பத்தின் தலைவர்" என்று ஆனால் அக்குடும்பத்தில் கிறிஸ்துவுக்கு இடம் தராத அவல நிலையும் காணமுடிகிறது. கிறிஸ்துவை உள்ளார்ந்த நிலையில் ஏற்றுக்கொண்டு வாழும் குடும்பங்கள் வாழ்வில் மகிழ்ச்சியான குடும்பங்களாய் வாழ்கிறது "கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக'' என்று கிறிஸ்து வெளிப்படுத்துவதின் நோக்கமே குடும்பங்கள் இறைவனால் இணைக்க வளமையாய் வாழ்ந்து காட்டுவதையே உணர்த்துகிறார்.*

*உறவுகளில் சங்கமே குடும்பம் ஆகும். உறவுகளில் அன்பு நிலைநாட்டப்பட வேண்டும். மன்னிப்பு மனிதனிடம் மலர்ந்ததால் மணம் வீசும் குடும்பம் ஆகும். விட்டுக்கொடுத்து வாழ்ந்தால் வ� மையானக் குடும்பத்தை கட்டலாம். சகிப்பு தன்மையோடு ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து ஒருடல் ஒருயிர் என்று உள்ளார்ந்த உணர்வில் நிலைத்தால் தலைசிறந்த குடும்பமாகும். அற்பணச் சிந்தையோடு வாழ்வது தான் மாதிரி குடும்பம். கற்களும், முட்களும் நிறைந்த சூழ� ல் தான் நாம் வாழ்கிறோம். இவைகளைத் தாண்டிச் சென்று உன்னதரின் உயர்வில் பண்புள்ளக் குடும்பமாய் தூய்மையான குடும்பமாய் அமைய ஜெபவாழ்வு மிக அவசியம். இறைவனுக்கு குடும்பத்தில் தொடர்பு எப்போதும் இருக்கவேண்டும். நம்மை ஒருகணம் சிந்திப்போம் கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கின்ற குடும்பங்களாய் திகழ நம்மை இறைவனின் கரங்களில் ஒப்புக்கொடுப்போம் இயேசுவின் எதிர்நோக்கினை குடும்ப உறவில் நிறைவாக்குவோம்.*

# நீதியின் வாழ்வு

2011
ஆகஸ்ட்
15
**திங்கள்**
**விடுதலை நாள்**

காலை
யாத். 23:1–11

தி. வ.
யாத். 23 : 2
**"...நியாயத்தைப் புரட்ட மிகுதி யானவர்களின் பட்சத்தில் சாய் ந்து, உத்தரவு சொல்லாதிருப் பாயாக"**

மாலை
லூக். 6:17–23

சிந்தனை
**நீதி வாழ்வின் பலன் அமைதியும் திருப்தியும்**

நீதி என்னும் சொல் சட்டத்தை அல்லது விதியை கடைபிடிப்பது ஆகும். இஸ்ரயேலர் நீதி என்பதை கடவுளோடும் கடவுளின் கொள்கையோடும் மனிதர்களுக்கு உரிய தொடர்பை விளக்குவதற்காக பயன்படுத்தினர். நீதியின் வாழ்வு என்பது கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள சீரான உறவின் வெளிப்பாடு. நாம் வாழும் வாழ்க்கைச் சூழ ல் சக மனிதர்களோடு நேர்மையுடனும், மனித நேயத்துடனும் வாழ்வதே இறைவனுக்கு முன் நீதி ஆகும். இறைவாக்கினர்களைக் குறித்து திருமறையில் காண்கிறோம். இவர்கள் நீதியை நிலை நாட்டும் ஊடகங்களாக அழைக்கப்பட்டனர். அநீதிக்கு எதிரானக் குரல் கொடுத்து எச்சரித்தனர். அநீதிகள் தலைவிரித்தாடும் உலகில் எங்கு நோக்கினும் தீமைகள் நிறைந்ததாய் காணப்படுகிறது.

நீதியை நாடுங்கள். ஒடுக்கப்பட்டோரை ஆதரியுங்கள். திக்கற்ற பிள்ளைகளின் வழக்கை விசாரியுங்கள் (ஏசா. 1:17) என ஏசாயா தீர்க்கர் வீரமுழக்கமிடுகின்றார். நீதியை நாடி அநீதியின் வாழ்வை ஒழித்து ஒரு புதிய நீதியின் சமூகத்தை நிலைநாட்ட நாம் அழைக்கப்படுகிறோம். நியாயம் தண்ணீரைப் போலவும் நீதி வற்றாத நதியைப்போலவும் புரண்டு வரக்கடவது என்று ஆமோஸ் தீர்க்கர் தெளிவுபடுத்துகிறார். நீதியின் வாழ்வு அவசியம் என்பதும் தீமையின் வாழ்வு நம்மை மேற்கொள்ளாம ருக்க நீதியைக் கடைபிடிக்க வேண்டும் என்பதையும் விவி யம் நமக்கு வ யுறுத்துகிறது. இந்நாளின் தியானப்பகுதியும் நமக்கு வ யுறுத்துவது நீதியின் வாழ்வு வேண்டும் என்றும் ஒரு தீர்க்கமான நிலையோடு வாழ தீயவரை நல்லவராக தீர்ப்பிட மாட்டேன் என்றும் தீர்க்கமான நிலையைச் சுட்டிக் காட்டுவதை நாம் உணரலாம். நீதியின் வாழ்வு மலர நம்மையும் முழுமையாய் அர்ப்பணிக்க நாம் அழைக்கப்படுகிறோம். நீதியற்ற, நியாயமற்ற, சமூகத்தில் நான் வாழ்கிறேன். என் வாழ்க்கை நீதியின் சமூகம் மலர சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்து காட்டுவேன் என்று ஒவ்வொருவரும் உத்தமமாய் தீர்மானம் செய்யவேண்டும். நீதியின் மேல் பசிதாகமுள்ள பாக்கியமுள்ளவர்களாய் மங்காத ஒளியாய் மணம் வீசும் நீதியின் மலராய் வாழ்வோம்.

2011

ஆகஸ்ட்

16

**செவ்வாய்**

காலை

1கொரி. 13:1–13

தி. வ.

1கொரி. 13:7

**“அன்பு...சகலத்தையும் தாங்கும்”**

மாலை

நீதி. 8:1–11

சிந்தனை

**பட்ட மரம் தளிர்க்காது அன்பற்றவன் வாழ்வு தழைக்காது.**

# அன்பு

ஒரு வயதான மன்னன் தனது பிறந்த நாளை மிகச் சிறப்பாக கொண்டாடினார். அன்று தனது அரண்மனை பணியாளர்கள், படைவீரர்கள், பாதுகாப்பாளர்கள் அனைவரையும் அழைத்து இந்த அரண்மனையி□ருந்து உங்களுக்குத் தேவையான பொருட்களை எடுத்து செல்லுங்கள் என்றார். அங்கிருந்த அனைவரும் செல்வங்கள், முத்துக்கள். பொன் ஆபரணங்கள் அனைத்தையும் அவரவர் தங்கள் விருப்பம் போல எடுத்துக் கொண்டு தங்கள் வீட்டிற்கு விரைந்தார்கள். சற்று நேரத்தில் வீட்டி□ருந்த பொருட்கள் அனைத்தும் கா□யாகி வட்டது. ஆனால் சிறு வயதில் இருந்தேஅங்கேயே வளர்ந்து வேலை செய்த தோட்க்காரன் ஒருவன் மட்டும் மன்னன் அருகிலேயே நின்று கொண்டிருந்தான். மன்னன் அவனை நோக்கி நீ போக வில்லையா? உனக்கு தேவையானது நீ எடுத்திருக்கலாமே? அதற்கு அவன் நான் சிறு வயதி□ருந்தே இங்கேயே வளர்ந்து தோட்டக்காரனாக வேலை செய்கிறேன்.உங்களோடு இறுதி வரை இருக்க விரும்புகிறேன். என் இறுதி மூச்சு வரை உங்கள் அன்பில் நிலைத்திருக்க விரும்புகிறேன் என்றான்.

இந்நிகழ்வு அன்புகூர்த□ன் உச்ச நிலையை நமக்கு தெளிவுப்படுத்துகிறது. (யோவா. 3 : 16) தனது ஒரே பேறான மகனை அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்புகூர்ந்தார் (யோவா. 3 : 16). அந்த அன்புகூருதல் மனித வாழ்வை நெறியுள்ள வாழ்வுக்கு வழிகாட்டுகிறதாய், வாழ்வின் பிரகாசமான வாழ்வுக்கு வித்திட்டதாய் அமைந்தது. அன்பு அடைக்கப்பட்ட வாசல்களை திறக்கிறதாயும், உடைக்கப்பட்ட உள்ளங்களை ஒன்றிணைக்கிறதாயும் அமைகிறது. நாம் இந்நாளின் தியானப்பகுதி ஒரு அன்பின் பாடல் என்று கூறலாம். அன்பு வாழ்வில் தலைசிறந்த பண்பாயும் மனித வாழ்வை பண்படச் செய்கிறதாயும் அமைகிறது.

அறிஞர் டால்ஸ்டாய் கூறுகிறார் சிலந்தி தன் வாயி□ருந்து உமிழும் நுரையினால் பின்னும் வலையைப் போல் மனிதர்கள் அன்பு என்னும் வலையை சிலுவையின் அடிச்சுவடுகளில் பின்னிட வேண்டும். சிலுவையின் அன்பு அனைவரையும் ஒன்றுப்படுத்துகிறது. கிறிஸ்துவின் அன்பு அனைத்தையும் தாங்கும் ஆற்றலை நமக்குத் தரட்டும்.

2011
ஆகஸ்ட்
17
**புதன்**

காலை
ஆதி. 2:18–25

தி. வ.
ஆதி. 2 : 24
**“...புருஷன் ... தன் மனைவியோடே இசைந்திருப்பான்”**

மாலை
மத். 16:6–12

சிந்தனை
**வளமான வாழ்வை பொறுப்புகளுடன் இசைவதில் காண்போம்.**



# மனிதனின் பொறுப்புகள்

*உலகனைத்தையும் படைத்த கடவுள் அதனை பண்படுத்தி பாதுகாக்கும் பொறுப்புணர்வை மனிதனுக்குக் கொடுத்தார் (ஆதி. 2 : 15). இறை சாய ல் படைக்கப்பட்ட தொடக்கக்கால மனிதன் (ஆதாம்) ஏதேன் தோட்டத்துக்குள் கொண்டுவரப்பட்டு கடமையைக் கருத்துடன் இறை கட்டளைப்படி செய்ய பணிக்கப்பட்டான். கடவுளின் கட்டளையை நிறைவேற்றும் பொறுப்பு மனிதனுக்கு கொடுக்கப்பட்டு வரலாற்றில் அதில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.*

*“கடமையைச் செய் பலன் எதிர்பாராதே” என்ற பழமொழி மனிதனை உழைக்கத் தூண்டுகிறது. தன் பொறுப்புகளைக் கருத்துடன் செய்திடவும் தூண்டுகிறது. கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற ஊடகமாய் இறைவன் பயன்டுத்தும் மனிதன் இறைவன் பார்வையில் முக்கியத்துவம் பெற்றவன். முற்பிதாக்கள் இறைவனால் தெரிந்துகொள்ளப்பட்டு அவர்திட்டத்தை நிறைவேற்ற பயன்படுத்தப் பட்டவர்கள். அவர்களது கடமை உணர்வுகள் ஒரு புதிய சமூகம் உருவாகவும் வாழ்வடையவும் காரணமாய் அமைந்தன. ஈசாக்கு விதைவிதைத்தான். நூறு மடங்கு பலன் பெற்றான் (ஆதி. 26 : 12).*

*இன்று இறைமக்களாகிய நம்மிடமும் பலவித பொறுப்புகளை இறைவன் தந்திருக்கிறார். குறிப்பாக குடும்பம் என்ற அமைப்பில் அதன் அனைத்து அங்கத்தினர்களும் பொறுப்புடன் செயல்பட அர்ப்பணிக்க வேண்டியவர்கள். கணவன் மனைவியின் இசைவு ஒட்டுமொத்த குடும்பத்திற்கும் ஒரு இசைவான நிலையை உருவாக்கும். குடும்பத்தில் திருச்சபையில் சமூகத்தில் அமைதி வாழ்வு நிலவவும், நல்ல வளர்ச்சியினைக் காணவும் இந்தப் பொறுப்புகள் தரப்பட்டிருக்கிறது. உலகம் காக்கப்பட, இயற்கை பாதுகாக்கப்பட, இயற்கை வளங்கள் வனப்பூட்டப்பட கடவுளின் வழிகாட்டுதலைக் கண்டு பொறுப்புடன் செயல்படுவோம். வளமான வாழ்வை சமூகம் அனுபவிக்க மனித பொறுப்புகள் மகுடமானவை. பொறுப்புடன் செயல்பட்டு உலகைக் காத்து நிறைவாழ்வடைவோம்.*

# மனப்பூர்வமாய் செய்தல்

2011
ஆகஸ்ட்
18
**வியாழன்**

காலை
கொலோ.3:18–25

தி. வ.
கொலோ. 3:19
**"...உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்துகொள்ளாதிருங்கள்"**

மாலை
நீதி. 8:22–30

சிந்தனை
**செயலுக்கு மிஞ்சிய எதிர்பார்ப்பு இறைவனுக்கே அடுக்காது.**

*உலகில் பிறந்த எந்த மனிதனும் மனதைச் செலுத்தி உடல் உழைப்பை வைத்து வாழவேண்டிய நிர்பந்தம் நிச்சயம் உள்ளது. இந்த உழைப்புகளுக்கு உலகம் பலவிதிமுறைகளை வகுத்திருக்கிறது. இறைவன் இதற்கு சிறந்த இலக்கணத்தை வகுத்துள்ளார். இந்த இலக்கணத்தை பின்பற்றும் உண்மை பக்தர்கள் கடின பாதையில் நடந்தாலும் அதன் பலனை அடைந்து திருப்தியுடன் வாழ்வர்.*

*பவுலடியார் கொலோசெயத் திருச்சபைப் பக்தர்களுக்கு திருமுகம் எழுதுகின்ற பொழுது ஆலோசனை வழங்குகிறார். இறைவன் வகுத்த இலக்கணத்தை மனதில் கொண்டு வாழவும் பணியாற்றவும் கற்றுக்கொடுக்கிறார். எதைச் செய்தாலும் மனிதனுக்கென்றல்ல இறைவனுக்கென்றே மனப்பூர்வமாய் செய்யுங்கள் (கொலோ. 3 : 24) என்கிறார். வாழ்வும் பணியும் இறைவனை மையப்படுத்தியவைகளாக அமைதல் சிறந்தது என்ற உண்மையைத் திருமறைக் கற்றுத் தருகிறது.*

*சுயநலம் கொண்ட எஜமானாகிய தன் மாமன் லாபானிடத்தில் ஆடுகளை மேய்க்கும் பணியைச் செய்த யாக்கோபு தன் பணியை மனப்பூர்வமாய் செய்கிறான். தன் ஊதியத்தை பலமுறை தன் எஜமானன் வஞ்சித்தபோது மனப்பூர்வமாய் பணியாற்றுகிறார். "உம்முடைய ஆடுகள் ஒன்றும் சினையழியவில்லை" "மந்தையின் கடாக்களை நான் தின்னவில்லை, என்னால் உமக்கு நஷ்டம் வராது'', போன்ற வார்த்தைகள் மனப்பூர்வமான அவனது பணியினை சுட்டிக்காட்டுகிறது (ஆதி. 31). இப்படி உத்திரவாதத்தோடும் நடுக்கத்தோடும் மனப்பூர்வமாய் யார் மனத்துடிப்புடன் செயல்படுகின்றார்களோ அவர்களே சிறந்த உழைப்பாளிகள். இவர்களோடு இறைவன் இடைபடுகிறார். அவர்களுக்கு வரும் துன்பங்களில், வெறுமைகளில் ஏமாற்றங்களில் இறைவன் துணை நிற்கிறார். நமக்குத் தரப்பட்டிருக்கும் எவ்வித பணிகளையும் மனப்பூர்வமாய் இறைவனுக்கொன்று செய்து இறையருளைப் பெற்றிடுவோம்.*

# இசைந்திருங்கள்

2011
ஆகஸ்ட்
19
**வெள்ளி**

காலை
மத். 19:1–9

தி. வ.
மத். 19 : 6
**“...தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன்”**

மாலை
நீதி. 8:31–36

சிந்தனை
**இறைவன் இருக்குமிடம் இசைவின் இருப்பிடம்.**

மன்னா சேர்ப்போம்

தொடக்க காலத்தில் இருந்தே மனுக்குலம் இசைந்து வாழ வேண்டும் என்று ஆண்டவர் விருப்பம் கொண்டார். எனவே மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார் (ஆதி. 2 : 18). சங்கீதக்காரன் சொல்லும்போது இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது (சங். 133 : 1) என்கிறார். ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடி இருப்பது நலம் என்று பிரசங்கி கூறுகின்றார். (பிரசங்கி 4 : 9) குடும்ப வாழ்வில் கணவன் மனைவி இசைந்திருக்கும் நிலையை இயேசுகிறிஸ்து இங்கே கற்றுத் தருகிறார் (மத். 19 : 1 9).

பெரியவர் ஒருவர் தன் முதிர்ந்த வயதில் பிள்ளைகளை அழைத்து ஒவ்வொருவரும் சிறிய குச்சி ஒன்றினைக் (கம்பு) கொண்டு என்னிடம் வாருங்கள் என்றார். அவர்கள் கொண்டு வந்தபோது ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஒடியுங்கள் என்றார். அவர்கள் இலகுவாக ஒடித்து முறித்தார்கள். திரும்ப அவர்களிடம் எல்லா கம்புகளையும் சேர்த்து கட்டி வைத்துக் கொண்டு ஒடிக்கச் சொன்னார். அது ஒடிக்க முடியவில்லை. அப்போது பிள்ளைகளைப் பார்த்து சொன்னார் “பிள்ளைகளே, நீங்கள் ஒவ்வொருவரும் தனிமையானால் உங்களை எதிரிகள் எளிதில் மேற்கொள்ள முடியும், நீங்கள் பலவீனர்கள். ஆனாலும் ஒன்று சேர்ந்து இசைந்திருந்தால் உங்களைச் சத்துருக்கள் மேற்க்கொள்ள இயலாது. எனவே இசைந்திருங்கள், பிரியாதிருங்கள்” என்று ஆலோசனை சொன்னார்.

நாமும் குடும்ப வாழ்வில், கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், நண்பர்கள் எச்சூழ லும் இசைந்து வாழ்வதே இறைவன் விரும்பும் பண்பு ஆகும். குடும்ப பிரிவினைகள் அதிகமாக அரங்கேறிவரும் இந்த நவீன காலத்தில் கடவுளின் கட்டளைகளை நாம் ஏற்பது ஒரு இசைவான வாழ்வை நமக்குத்தரும். கடவுள் இணைத்த கனமான வாழ்வை கண்ணியத்துடன் காத்து இறையாசி பெற்றிடுவோம்.

2011
ஆகஸ்ட்
20
**சனி**

காலை
சங். 128

தி. வ.
சங். 128 : 1
**"கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்"**

மாலை
மத். 18:11–14

சிந்தனை
**பயந்து கடவுளின் பாதம் அமர்வோன் பாக்கியவான்.**

மன்னா சேர்ப்போம்

# பாக்கியவான்கள்

அனைத்து மக்களும் ஆண்டவர் அருளும் உயர்பேற்றினை அடைந்து வாழ வேண்டும் என்பது இறைவனின் விருப்பம். அதனை அடைந்திட இறைவனுக்கு அஞ்சி வாழ்ந்திட வேண்டும். (சங். 128:1). இறைவனுக்கு அஞ்சுவது என்பது தீமையை விட்டு விலகுதல். தீமை இறைவன் தரும் உயர்பேற்றினை அடைந்திட நம்மை தடுத்துவிடுகிறது. எனவே தீமைக்கு விலகி தூய்மை வாழ்வை ஏற்று இறைவனுடன் இசைந்து வாழ முயற்சிப்பது நம்பிக்கை வாழ்வுக்கு சிறந்தது. நமக்கு ஆண்டவர் அமைத்து வைத்த ஒரே வழி இருக்கின்றது அந்த வழியில் நடக்கவேண்டும் என்று அழைக்கின்றார். அந்த ஒரே வழியில் நடந்தால் நாம் பாக்கியவான்களாய் இருப்போம்.

எரேமியா தீர்க்கர் இறைமக்கள் இறைபாதையை தெரிந்துகொள்ளும் ஓர் அழைப்பு விடுக்கிறார் (16 : 16). "வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவை என்று கேட்டு விசாரித்து நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதில் நடவுங்கள்", என்று திருமறை கற்றுத் தருகிறது. ஏன் என்றால் நாம் பாக்கியவான்களாக இருக்க வேண்டும் என்பதே. பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வழியனுப்பும்போது "பார்த்து நடவுங்கள்" என்று நல் யோசனை சொல் அனுப்புகின்றனர். ஏன் என்றால் அவர்கள் தீமைக்கு விலகி நல்ல பாதையை தெரிந்து பாக்கியவான்களாக வாழ வேண்டும். வாழ்வில் உயர்வடைய வேண்டும். உன்னதமான நல்ல வாழ்வு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

நம் அனைவர் வாழ்விலும் ஓர் உயரிய நோக்கம் இறைவனுக்கு உண்டு. எப்போதும் மேன்மை அடைய வேண்டும் என்பதே, பாக்கியவான்களாக மாற வேண்டும் என்பதே. இறைவன் தரும் முழுவாழ்வை இன்பமாய் பெற்றிட வேண்டும் என்பதற்கே அதற்காக இறைவனுக்கு அஞ்சி அவர் வழிகளில் நடந்து மேன்மைபெற்று பாக்கியவான்கள் வரிசையில் நாமும் சேர்ந்து உயர்வடைய முயன்றிடுவோம். இறைவன் தரும் நிறைவாழ்வை உரிமையாக்குவோம்.

2011
ஆகஸ்ட்
21
**ஞாயிறு**

காலை
தீத்து 3:1–7

தி. வ.
தீத்து 3 : 7
**"...இயேசுகிறிஸ்து மூலமாய், ... பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்"**

மாலை
நீதி. 10:1–7

சிந்தனை
**பூரண வாழ்வும் புனித வாழ்வும் பூரணர் இயேசுவின் புதிய சிந்தையில் வரும்.**

மன்னா சேர்ப்போம்

# புதிய சிந்தை

புது பிறப்பு அளிக்கும் நீரினாலும், புதுப்பிக்கும் தூய ஆவியாலும், கடவுள் நம்மை மீட்டார். புது பிறப்பு அளிக்கும் திருமுழுக்கைக் கடவுள் நமக்காக ஏற்படுத்தினார். திருமறைப் பகுதியில் பவுல் தீத்துவுக்கு எழுதும்போது நமது ஆரம்ப நிலை அல்லது நமது தற்கால இயல்பு நிலையைக் கூறுகிறார். நாம் அறியாமையுடையவர்கள் கீழ்ப்படியாதவர்கள், நெறி தவறியவர்கள், தீய நாட்டங்களுக்கும் சிற்றின்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களாக இருந்தவர்கள், இருக்கிறவர்கள். தீமையிலும் பொறாமையிலும் உழன்று காழ்ப்புணர்ச்சிகளால் ஒருவரை ஒருவர் வெறுக்கிறவர்கள். ஆனால் இறைவனின் இரக்கமும் மறு ஜென்ம முழுக்கும் பரிசுத்தாவியின் புதிதாக்குதலும் நம்மை இரட்சிக்கும்.

அதாவது தலைவர்கள் அதிகாரிகள் ஆகியோருக்கு கீழ்ப்படிய வேண்டும். நற்செயல் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும். எவரையும் பழித்து பேசக்கூடாது சண்டை போடாமல் கனிந்த உள்ளம் உடையோராய் நிறைந்த பணிவுடன் ஒருவரோடு ஒருவர் பழக வேண்டும். மனுக்குலத்தின் இத்தகைய புது வாழ்விற்கு ஆண்டவர் திருமுழுக்கை திரு+அருள்+சாதனமாக ஏற்படுத்தியுள்ளார். "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாக இருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின" (2 கொரி. 5 : 17) என்பதற்கு ஏற்ப புதிய சிந்தை, செயல் உடையோராக வாழ்வது சிறந்தது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு மீட்கப்பட்ட வாழ்வில் இணைவது புதிய சிந்தையை நம்மில் உருவாக்குகிறது. இந்த புதிய சிந்தையால் தூய ஆவியார் நம்மில் செயலாற்றுகிறார். நாம் முழுவாழ்வின் அனுபவத்தை இறைவனிடமிருந்து உரிமையாக்கிக் கொள்ளவும் முடியும்.

கிறிஸ்து இயேசு திருமுழுக்கு பெற்றார். நமக்கு மாதிரியானார். புதிய நற்செய்தியைத் தந்தார். புதிய சிந்தையை நம்மில் உருவாக்கினார். மத். 22 : 21; அப். 10 : 38; மத். 26 : 50 இந்த வசனங்கள் சிந்தனையாக இருக்கட்டும். இந்நாளில் இறையருள் நம்மில் நின்று நிலவுவதாக.

# மறுவாழ்வின் அனுபவம்

2011
ஆகஸ்ட்
22
**திங்கள்**

காலை
யோவா. 3:1–8

தி. வ.
யோவா. 3 : 5
**"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான்"**

மாலை
நீதி. 10:8–21

சிந்தனை
**மனமாற்றமான மறுவாழ்வும் மறைவாழ்வும் இறையாட்சியைத் தரும்.**

திருமுழுக்கு கடவுளின் நியமம் அல்லது ஒழுங்காகக் கருதப்படுகிறது. மேல் குறிப்பிடும் வசனத்தில் ஒருவன் இறையாட்சிக்குள் உட்பட வேண்டுமானால் அவன் மறு பிறப்பு அடைய வேண்டும். இந்த மறுபிறப்பு தாயின் வயிற்றில் புகுந்து மறுபடியும் பிறப்பது அல்ல. மாறாகத் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறப்பது ஆகும். இது மனுக்குலத்தின் சுத்திகரிப்பைக் குறிப்பிடுகிறது. எசே. 36 : 25 இல் நான் தூய நீரை உங்கள் மேல் தெளிப்பேன், நீங்கள் உங்கள் எல்லா அழுக்கி ருந்தும் தூய்மையாவீர்கள் என்றும் ரோ. 8 : 9 இல் கடவுளின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருப்பதால் நாம் ஊனியல்பைக் கொண்டிராமல் இருப்போம். என்றும் குறிப்பிடுகிறது. ஊனியல்புக் கேற்ப வாழ்வோரின் நாட்டமெல்லாம் அந்த இயல்புக்கு உரியவற்றின் மே ருக்கும். இத்தகைய இயல்புடையோருக்கு வருவது சாவு ஆகும். இவர்கள் ஆண்டவருக்கு பிரியமாக வாழ முடியாது.

திருமுழுக்கு மூலம் மறுபடியும் பிறக்கும் ஒருவன் ஊனியியல்பை முற்றிலும் களைந்து இருப்பான். மாறாக ஆவியின் கிரியைகளைக் கைக்கொண்டிருப்பான் மட்டுமல்ல ஆவியின் கனி கொடுக்கிறவனாயிருப்பான். (கலா. 5 : 19 23). கிறிஸ்துவை உடையோராக இருந்தால் மாமிசத்தையும் அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்து இருப்பார்கள். இந்த சிந்தையில் இந்நாளிலும் எந்நாளிலும் நமது வாழ்வை தூய்மையாக வைத்துக் கொள்ள முயற்சிப்போம்.

நம்முடன் தம்மை இணைக்க இயேசு நாதர் திருமுழுக்குப் பெற்றார். (யோ. 8 : 46). என்னிடத்தில் பாவம் உண்டு என்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்? என்று சவால் விட்டு தனது தூய வாழ்வை மக்களுக்கு வெளிப்படுத்தினார். யாரும் குற்றம் சொல்லவில்லை. குற்றத்தைக் கூறி குறையை கண்டுபிடிக்க முயற்சித்தவர்கள் வெற்றியடையவு மில்லை. இத்தகைய அளவில் நாம் நமது காலத்தைத் தூய்மையாக வாழ ஒப்புக் கொடுப்போம்.

2011

ஆகஸ்ட்

23

செவ்வாய்

காலை

மாற். 16:14–20

தி. வ.

மாற். 16 : 16

**“விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்”**

மாலை

நீதி. 10:22–32

சிந்தனை

**கட்டளைக்கு கீழ்படிதல் மீட்டைப உரிமையாக்கும்.**

மன்னா சேர்ப்போம்

# பெரிய கட்டளை

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின், பதினொரு சீஷருக்கும் தன்னை மறுபடியும் வெளிப்படுத்தியபோது அவர்களுக்கு ஓர் அன்புக் கட்டளை கொடுத்தார். “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் அவர்களுக்கு திருமுழுக்கு (ஞானஸ்நானம்) கொடுங்கள்” என்பதே அந்த கட்டளை இதை நாம் செய்ய வேண்டும். கட்டளை மீறுவது பாவம் ஆகும். இயேசு என்ன சொல்லுகிறாரோ அதன்படி அப்படியே செய்வதுதான் பாக்கியம்.

ஆதி மனிதனாகிய ஆதாம் கட்டளையை மீறினான். அது அவனுக்கு சாபத்தீடாக மாறியது. தோட்டத்தை விட்டு வெளியேற்றப்பட்டான். கானாவூர் திருமண வீட்டார் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்தார்கள் பெரும் பாக்கியத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இன்று நாம் கடவுளின் கட்டளைகளையும், நியமங்களையும், வார்த்தைகளையும் கீழ்ப்படிந்து கடைபிடிக்க வேண்டும். கணவன் தன் மனைவியைச் சொந்த சரீரமாகக் கருதி அன்பு கூர வேண்டும். மனைவி தன் கணவனுக்கு எல்லா காரியத்திலும் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும். பெற்றோர். பிள்ளைகளை கோபப்படுத்தக் கூடாது. பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும். இவைகள் குடும்பத்தில் கர்த்தர் நமக்குத் தந்தக் கட்டளை. இந்த கட்டளையை நாம் இன்று கடைபிடிக்கும்போது நமது குடும்பங்கள் இறையரசின் முன் சுவையாக இருக்கும் (எபே. 5 : 22 6 : 4). மனிதன் கடவுளுக்கும், மனிதன் மனிதனுக்கும் செய்ய வேண்டிய கட்டளையை நாம் மத். 22 : 37 39 ல் பார்க்கிறோம்.

கடவுள் இட்ட கட்டளையைக் கைக்கொள்வோரிடம் அவர் கூட இருப்பார். உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களோடு இருக்கிறேன் (மத். 28 : 20) என்றவர் நம்முடன் இருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம். இந்த பாக்கியம் இந்நாளிலும் நம்மில் நின்று நிலவுவதாக.

2011
ஆகஸ்ட்
24
**புதன்**

காலை
ரோ. 6:1–8

தி. வ.
ரோ. 6 : 5
**“அவர் உயிர் தெழுத–ன் சாய–லும் இணைக்கப் பட்டிருப்போம்”**

மாலை
நீதி. 11:1–8

சிந்தனை
**இறைவனோடு இணைக்கப்பட்டு இறையாட்சிக்கு இனிய பலன் கொடுப்போம்.**

# பலன் கொடுக்கும் வாழ்வு

திருமுழுக்கு மூலம் கிறிஸ்துவின் பாடுகளிலும் உயிர்த்தெழுதலிலும் நாம் பங்கு பெறுகிற உண்மை இன்றய தியானப் பகுதியில் சொல்லப்படுகிறது. கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக அடக்கம் பண்ணப்பட்டோம். அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின கடவுளின் வல்லமையைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாய் திருமுழுக்கு வழியாய் எழுப்பப்பட்டும் இருக்கிறோம். முழுக்காட்டுதல் நம் உடலை புதைத்தலையும், எழும்புதல் உயிரோடு எழும்புவதையும் எடுத்துக் காட்டுகிறது.

இத்தகைய இசைவு அல்லது இணைவு வரும்போது கிறிஸ்துவின் அச்சு அடையாளங்கள் நம்மில் காணப்படும். நான் மெய்யான திராட்சைச் செடி நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனி கொடுப்பான் (யோ. 15 : 1). நல்ல மரம் நல்ல கனிகளையும், கெட்ட மரம் கெட்ட கனிகளையும் கொடுக்கும். கனிகளைக் கொண்டு மரத்தை அறியலாம். திருமுழுக்கு மூலம் அவரோடு இணைந்து இருக்கும் நாம் அவர் விரும்பும் நல்ல கனிகளைக் கொடுப்போம்.

கனி கொடுக்க இயலாது இருக்கும் நம்மை நமது இரட்சகர் நல்ல ஒரு தோட்டக் காரனாக இருந்து நம்மைச் சுற்றி கொத்தி, எரு போட்டு கனி கொடுக்கும் எனக் காத்து இருக்கிறார். எனவே நாம் காலங்களையும் நல்ல தருணங்களையும் பெறுகிறோம் என உணர்ந்து நல்ல கனிகொடுக்க முற்படுவோம். கனி கொடாத மரம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும். கனி கொடுக்கும் கொடி எதுவோ அது இன்னும் அதிக கனி கொடுக்க நம்மை திருமுழுக்கு மூலம் இணைத்து வாழ வைக்கிறார். மறவாது ஆண்டவர் விரும்பும் மதுரக் கனியைக் காணச் செய்வோம். அவருடன் உயிரோடு எழுப்பப்பட்ட அனுபவத்தில் வாழ்ந்திட இறைவன் அருள்புரியட்டும்.

# நல் மனசாட்சி

2011

ஆகஸ்ட்

25

**வியாழன்**

காலை

1பேது. 3:15–22

தி. வ.

1பேது. 3 : 21

**“...ஞானஸ்நானமானது, ... நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழு—னால் இரட்சிக்கிறது”**

மாலை

நீதி. 11:9–17

சிந்தனை

**மனசாட்சியை அவித்துப் போடாமல் மனசாட்சியுடன் நல்லது செய்வோம்.**

மன்னா சேர்ப்போம்

அப்போஸ்தலனாகிய பேதுரு தனது நிருபத்தில் திருமுழுக்கு மாமிச அழுக்கை மட்டும் நீக்குவதாயிராமல் தேவனைப் பற்றும் நல் மனச்சாட்சியின் உடன்படிக்கையாக இருக்கிறது என்றார். மனுக்குலத்திற்கு மனசாட்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் நமது மனம் சாட்சியாக இருக்கிறது. தூயபவுல் ரோமர் 2 ஆம் அதிகாரத்தில் “நியாயப் பிரமாணத்தைப் பெற்றவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கொண்டு நியாயம் தீர்க்கப்படுவார்கள். நியாயப்பிரமாணம் கொடுக்கப்படாதவர்களுக்கு அவரவர் மனச்சாட்சி நியாயம் தீர்க்கும்” எனக் கூறினார். திருமுழுக்கு பெற்ற நாம் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளை விட்டு நல்ல செயல் செய்ய அழைக்கப்படுகிறோம். தீமை செய்து பாடு அனுபவிப்பதிலும் நன்மை செய்து பாடு அனுபவிப்பது மேலானது. கிறிஸ்து நம்மை தேவனிடத்திற்கு சேர்ப்பதற்காக அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக பாடு அனுபவித்தார்.

திரித்துவ கடவுளின் திருப்பெயரில் நம்பிக்கையுடன் நாம் பெற்றுக்கொள்ளுகிற திருமுழுக்கு பற்றாளர்களை முழுமையான மீட்பின் வாழ்விற்கு வழிநடத்திச் செல்லுகின்றது. ஏனென்றால் கிறிஸ்து மனுக்குலத்தின் பாவங்களுக்காய் ப யானார். உயிர்த்தெழுந்து மீட்பின் வாழ்வை மனுக்குலத்திற்கு உரிமையாக்கித் தந்தார். திருமுழுக்கு நம்மை பாவத்திற்கு மரித்து நீதிக்கென்று பிழைக்கும் அனுபவத்தையும் கிறிஸ்துவில் உயிர்த்தெழுத லும் நம்மை இணைக்கிறது.

இன்று உலகினில் மனச்சாட்சியைக் கொன்று கொலை, கொள்ளை, தீய செயல் இவைகள் ம ந்து போயின. தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். தீமையை நன்மையால் வெல்ல வேண்டும். நாம் பெற்றிருக்கும் திருமுழுக்கு நமது மனச்சாட்சியின் உடன்படிக்கையாக இருந்து நாம் நன்மை செய்ய தூண்டட்டும். நன்மை செய்தால் மேன்மை உண்டு. நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு.

2011

ஆகஸ்ட்

26

**வெள்ளி**

காலை

1கொரி. 12:1–13

தி. வ.

1கொரி. 12:13

**“. . . ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற் குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, ... தாகந்தீர்க் கப்பட்டோம்”**

மாலை

நீதி. 11:18–31

சிந்தனை

**“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு”**



# கிறிஸ்துவில் ஒருமைப்பாடு

இந்த வசனத்தில் பலதரப்பட்டவர்கள் திருமுழுக்கு மூலம் ஒன்றாக்கப்படுகிறார்கள் என்கிறார் பவுல் அடியார். யூதர், கிரேக்கர், அடிமைகள், சுயாதீனர்கள் எல்லோரும் ஒன்று என்ற உண்மையை எடுத்து உரைக்கிறார். இன்றைய உலகில் திருமுழுக்கு பெற்றவர்களுக்குள்ளே பலவிதமான பிரிவுகள், அதோடு மட்டுமல்ல பலவிதமான விரோதங்கள். இதனால் இவ்வுலகினில் இறையரசின் விரிவாக்கம் தடைபடுகிறது. அநேகர் கிறிஸ்துவை அறிந்து ஏற்றுக் கொள்ளவும், திருச்சபையில் அங்கம் ஆகவும் தயங்குகிறார்கள். கிறிஸ்தவர்களின் மாதிரியற்ற வாழ்வைப் பார்த்து அநேகர் வருந்துகிறார்கள்.

இந்தியாவின் தேசப்பிதாவாகிய காந்தியடிகள், “நான் கிறிஸ்துவையும் அவரது போதனைகளையும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் கிறிஸ்தவர்களை ஏற்றுக் கொள்ள தயங்குகிறேன்” என்றார். ஏனெனில் இவர்களுக்குள் பலவிதமான பிரிவினைகள், இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் சரீரத்தில் உறுப்புக்கள் எப்படி ஒன்றோடு ஒன்று இசைந்து இணைந்து இருக்கிறதோ அதுபோல இருக்க அழைக்கப்பட்டவர்கள். ஏனெனில் ஒரே தூய ஆவியார் திருமுழுக்கின் வழியாய் நம்மில் இடைபடுகிறார். சரீர அவயவங்களில் இருக்கும் இணைவைப்போன்று திருமுழுக்கின் வழி கிறிஸ்துவில் நாம் ஒன்றிணையும் அனுபவத்தையும் பெற்றுக்கொள்கிறோம்.

இறைமகன் இயேசு என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் நானும் பிதாவும் ஒன்றாகவே இருக்கிறோம் என்றார் (யோவா. 14 : 9, 10). இசைவில்லாமல் இருக்கும் மனுக்குலத்திற்காக கிறிஸ்து மன்றாடினார். பிதாவே நாம் ஒன்றாக இருப்பது போல அவர்கள் நம்மில் ஒன்றாகவும், அவர்கள் ஒருவருக்கொருவர் ஒன்றாக இருக்கவும் வேண்டுகிறேன் என்றார் (யோவா. 17 : 21, 22). திருமுழுக்கு மூலம் நாம் இறைவனோடு ஒன்று படுவோம். இயற்கையோடும் ஒன்றுபடுவோம். இறைவனின் திட்டத்தை நிறைவேற்றுவோம்.

# மனந்திரும்பும் வாழ்வு

2011
ஆகஸ்ட்
27
**சனி**

காலை
லூக். 7:27–35

தி. வ.
லூக். 7 : 30
**“பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ... ஞானஸ்நானம் பெறாமல்.. தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்”**

மாலை
நீதி. 12:1–7

சிந்தனை
**மனமாற்றம் வாழ்வு மாற்றத்தின் அடிப்படை**



முழுக்கு முனிவர் யோவான் இயேசுகிறிஸ்துவை முன் அறிவிப்பவராய் தன் திருப்பணியைச் செய்தார். மனமாற்றம் பெற்ற வாழ்வை அனைவரும் பெற்றுக்கொள்ள பாவமன்னிப்புக்கென்று திருமுழுக்குப் பெற அழைப்பு விடுத்தார். அவருடைய உபதேசத்தைக் கேட்டவர்கள் பாவ மன்னிப்புக் கென்று மனந்திரும்புதலுக்கான திருமுழுக்கு பெற்றார்கள். அவர்களில் அனேகர் பாவிகள், ஆயக்காரர்கள். அவர்கள் மீட்பின் அடையாளமாக இறைவனை அறிந்தார்கள். அவர் நீதிமான் என அறிக்கையும் செய்தார்கள். மட்டுமல்ல பலமக்கள் மனமாற்றம் பெறும் வாழ்வைப் பெற்றுக்கொள்ள தங்களையேச் சான்றாக்கினார்கள்.

ஆனால் உயர்குடியினர் எனக் கருதப்படும் நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்கும் பரிசேயரும், மக்களிடம் நியாயம் விசாரிக்கிறவர்களும் திருமுழுக்கை அற்பமாகக் கருதி அதனைப் பெற்றுக்கொள்ள மறுத்தார்கள். இது அவர்களுடைய மீட்புக்கு பதிலாக கேடாக அமைந்தது. இது தேவனுடைய திருத்திட்டம் என்பதை அறியாமல் போனார்கள். இதைப்போல சிலுவையைக் குறித்தப் போதனைக் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமானது இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு தேவ பெலன் ஆனது. பலமுறை உணர்த்தப்பட்டும் உணர்வு அடையாமல் தம் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சாகயர் இன்றி அழிந்துபோவான்.

எனவே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வாழ்நாள்களில் கர்த்தருக்கு, அவருடைய பிரமாணங்களுக்கு, அவர் ஏற்படுத்தியிருக்கும் ஒழுங்குகளுக்கு, நியதிகளுக்கு நாம் எதிர்த்து நில்லாமல் அதை கண்ணியமாக ஏற்றுக் கொண்டு அதன் வழியான வாழ்வையும் வளத்தையும் பெற்று வாழ்வோம். இந்த நாள் நம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருப்பதாக. பரிசேயர் கூட்டமும் இந்நிலைக்குத் தள்ளப்பட்டது. தூய வாழ்வையும் மனமாற்றத்தையும் வெறுத்தார்கள். பாரம்பரியங்களை நம்பி இறைவனை விட்டு விலகிச் சென்றார்கள்.

# அழியா உடன்பாடு

2011

ஆகஸ்ட்

28

**ஞாயிறு**

காலை

மாற். 14:12–26

தி. வ.

மாற். 14 : 14

**"...நான் என சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கேயென்று போதகர் கேட்கிறார்"**

மாலை

நீதி. 12:8–15

சிந்தனை

**தீமைகள் நீங்கி தூய்மைபெற புது உடன்பாடு வழிகாட்டும்.**

மன்னா சேர்ப்போம்

உடன்படிக்கை மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே ஏற்பட்ட நல்லுறவின் ஆதாரம் ஆகும். தீர்க்க தரிசனங்களும், நியாயப்பிரமாணங்களும் யோவான் காலத்தோடு போதுமானது என்று கூறி, இயேசுநாதர் புது உடன்படிக்கையின் அடையாளமாகத் தம்மை முன் நிறுத்தினார். சிலுவையில் அவர் அடிக்கப்படுவதற்கு முன் சீடர்களுடன் பஸகாவை ஆசரித்துப் புது உடன்படிக்கை ஏற்படுத்த விரும்பி சீடர்களிடம் அதைச் சொல்கிறார்.

ப (அல்லது) இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்று பழகிப்போன இஸ்ரவேல் மக்களுக்கு புதிய உடன்பாட்டை கடைபிடிக்கும்படி இயேசு தாமே முன்மொழிகின்றார். ஆனால் இதனை ஏற்க விரும்பியோர் சிலர், ஏற்க விரும்பாதோர் பலர். எனக்காக ஆண்டவர் தமது ஜீவனைத் தந்து என்னை மீட்டுக்கொண்டார் என்று விசுவாசிக்கின்றபோது பாவ மன்னிப்பின் விடுதலை வாழ்வை பெற்றுக் கொள்ளுகின்றோம். இது முழுமையான அழியா வாழ்வு ஆகும். இதனை ஆண்டவரோடு ஐக்கியப்படுவதின் வழியாக உரிமையாக்கிக் கொள்கிறோம் என்பதை விசுவாசிக்க கடமைப்பட்டுள்ளோம். இது மனுக்குலத்தோடு இறைமகன் இயேசு செய்த அழியா உடன்பாடு; இதனை அவரது வருகை மட்டும் கடைபிடிப்பதுவே இறையாட்சியின் வாழ்வினைப் பெற்றுதரும்.

இன்றும் புது உடன்பாட்டின் காரணரான ஆண்டவர், புது வாழ்வுக்கு நேராக நம்மை அழைத்து வழிநடத்துகின்றார். வாழ்வின் தீமைகளில் இருந்து விடுதலைப் பெற்று புது வாழ்வைப் பெற்றிட புது உடன்படிக்கையாம் திருவிருந்தின் வழி உதவி செய்கிறார். இவ் உடன்பாட்டினால் விடுதலை வாழ்வை ஈவாக பெற்றுக் கொள்ளுகின்றோம். இதனைப் பவுலார் எபேசி 2 : 8 இல் "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானது அல்ல இது தேவனுடைய ஈவு" என்கின்றார். எனவே நிலையான இவ் உடன்பாட்டில் உறுதியாயிருந்து, முழு வாழ்வு பெறுவோம்.

2011
ஆகஸ்ட்
29
**திங்கள்**

காலை
மத். 26:26–30

தி. வ.
மத். 26 : 27
**“...நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்”**

மாலை
நீதி. 12:16–28

சிந்தனை
**தரணியின் தாகம் தீர்க்கும் ஜீவநதி இயேசுவுடன் இணைவோம்.**



# தாகம் தீர்க்கும் ஜீவநதி

இயேசுகிறிஸ்துவின் இறுதி பஸ்காவில் சீடர்களுடன் அமர்ந்த தருணம் பலவிதப் பாதைகாட்டுதலைத் திருச்சபைக்குத் தந்திருக்கிறது. அப்பத்தையும் திராட்சை இரசத்தையும் கரத்திலேந்தி இறைவனுக்கு துதி செலுத்திச் சீடர்களுக்கு பகிர்ந்தளித்து அருந்தச் சொல்கிறார். அவர் வருகை மட்டும் வாழ்வின் தாகம் தீர்க்கும் ஆதாரமாய் ஏற்கச்சொல் கட்டளையிட்டார்.

தாகம் ஏற்படுவது இயல்பான ஒன்று. கடினமாக வேலை செய்தாலோ, நடந்தாலோ களைப்பினால் தாகம் ஏற்படுவது இயல்பு. தாகத்தை தீர்க்க உடனடி தண்ணீர் குடிக்கின்றோம். தாகம் தணிகிறது. ஆனால் மறுபடியும் தாகம் வருகிறது. தாகம் தீர்வதில்லை. இங்கு ஆண்டவர் தாகம் தீர்க்கும் ஜீவ நதியாய் தம்மை வெளிப்படுத்துகின்றார். தண்ணீர் மொண்டு கொள்ள வந்த சமாரிய பெண்ணோடு உரையாடியதன் விளைவாக, பெண் விடுதலைக்கான தாகம் தீர்த்து வைக்கப்பட்டது. அதாவது சாதி வேற்றுமையால் காணப்பட்ட சமாரியர்  யூதர் என்ற நிலை தவிர்க்கப்படுகிறது மேலும் ஆண்களும், பெண்களும் சமம் என்ற உரிமை மதிக்கப்படுகிறது. நீண்ட நாள் பிரச்சனையான யூதர் சமாரியர் என்ற பிரச்சனையான தாகம் தீர்க்கின்றார் இயேசு.

யோவா. 4 : 14 இல் “நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகம் உண்டாகாது. நான் அவனுக்கு கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார். எனவே, அவரை நினைவு கூரும்படி ஆண்டவர் ஏற்படுத்தித் தந்தப் பரிசுத்த சாக்ரமெந்தாகிய திருவிருத்தில் அவரது சரீரத்தைப் புசித்து, அவரது ரத்தத்தை நம்பிக்கையோடு பானம் செய்கின்றோம். இது ஆண்டவர் மனுக்குலமாகிய நம்மோடு அவர் செய்த புதிய உடன்படிக்கை ஆகும். இதுவே அனுதின வாழ்வின் தாகத்தைத் தணித்து அல்லது எதிர்பார்ப்பை நிறைவேறச் செய்கிறது. தாகத்தை தீர்க்க தண்ணீரண்டை ஓடுவது போன்று, நமது அனுதின வாழ்வில் ஜீவ தண்ணீராம் ஆண்டவரோடு சேர்ந்து செயல்படுவோம்.

2011
ஆகஸ்ட்
30
**செவ்வாய்**

காலை
யோ. 6:48–54

தி. வ.
யோ. 6 : 54
**“என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு”**

மாலை
நீதி. 13:1–7

சிந்தனை
**அறியாமையை அகற்றி அழியாமையைத் தரித்திடுவோம்.**

மன்னா சேர்ப்போம்

# அழியாமை

*வயது சென்று இறை அழைப்பைப் பெற்ற தாயாரைப் பற்றி இறுதி அஞ்சலியின்போது கூறப்பட்ட ஓர் கூற்று யாதெனில், “இந்த தாய் இந்த வீடு அழிந்துபோகாமல் பாதுகாத்தார்” என்பதாகும். அப்படியென்றால், அழியாமல் ஒன்று பாதுகாக்கப்படுவது மனிதர்களின் மத்தியில் சிறப்பாக போற்றப்படுகிறது. நாம் வாழும் உலகில் அழியாமையை சுதந்தரித்துக் கொள்ள இறைவன் விரும்புகின்றார். எனவே இறைவன் தமது ஒரே குமாரனை உலகிற்கு அனுப்பினார் (யோ. 3 : 16).*

*எனினும் மனிதன் தனது சுய இச்சையினாலும், சுய நலத்தினாலும் உலகு சார்ந்த வாழ்வுக்குரிய காரியங்களுக்கு மிகுதியான நேரத்தைச் செலவு செய்கின்றான். ஆனால் மனிதன் தனது வாழ்வில் எதை இழந்தாலும், நஷ்டப்பட்டாலும் அழியா வாழ்வைப் பெற்றுக் கொள்ள ஆர்வம் உடையவராக இருக்க வேண்டும் என ஆண்டவர் போதித்தார். மத். 18 : 8இல் “உன் கையாவது, உன் காலாவது உனக்கு இடறல் உண்டாக்கினால், அதை தறித்து போடு, நீ இரண்டு கையுடையவனாய், அல்லது இரண்டு காலுடையவனாய் நித்திய அக்கினியில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய் அல்லது ஊனனாய் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்”. என்று சொல்லப்பட்டிருக்கிறது.*

*அழியா வாழ்வு அல்லது நிலை வாழ்வு ஆண்டவர் தருகின்றார் என்ற விசுவாசம் நமக்கு அடிப்படையில் தேவையானது. என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (யோ. 6 : 47) இதன் அடையாளமாகத் தான் நாம் ஆண்டவரது பரிசுத்த திருவிருந்திலும் நம்பிக்கையோடு பங்குபெறுகின்றோம் (யோ. 6 : 14). என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன் என்கிறார். அழியும் வாழ்வைத் தவிர்த்து, அழியா வாழ்வுக்குத் தம்மை அழைத்து செல்லும் ஆண்டவரின் வழி வாழ அர்ப்பணிப்போம்.*

2011
ஆகஸ்ட்
31
**புதன்**

காலை
1கொரி.11:27–34

தி. வ.
1கொரி. 11:28
**"எந்த மனுஷனும் ... சோதித்தறிந்து, ... அப்பத்தில் புசித்து ..., பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்"**

மாலை
நீதி. 13:8–25

சிந்தனை
**திருவிருந்து சோதித்து அறிந்து பங்கேற்கும் இறைவிருந்து.**



# பாத்திரராய் நடத்தல்

"ஆழம் தெரியாமல் காலை விடாதே" என்பது தமிழ் முதுமொழி. முன் பின் தெரியாத இடத்திற்கு செல்லும்போது போக வேண்டிய இடத்திற்கு செல்ல நாம் முன் கூட்டியே விசாரித்து செல்வோம். அது போன்று அனுதின வாழ்வில் நாம் செய்யும் செயல்கள் அத்தனையும் இறைவனின் பார்வையில் ஏற்புடையதாக அமைய வேண்டும் என்ற நல்லெதிர்நோக்கோடு செயல்படுவது தேவையானதாகும்.

இன்றைய தியானப் பகுதியில் பரிசுத்த சாக்ரமெந்தாகிய திருவிருந்தில் ஆயத்தம் இல்லாமல், அபாத்திரமாய் பங்குபெறுவது சரியான செயல் அல்ல என்பதைப் பவுலார் குறிப்பிடுகின்றார். எந்த ஒரு செயலையும் அபாத்தரமாக செய்வது தீங்கு இழைக்கும் என்பது இயல்பு. அதிலும் இறைவனுக்குரிய எந்த ஒரு காரியத்தையும் தகுதியில்லாமல் அல்லது தூய்மையற்ற உள்ளத்தோடு செய்தால் தண்டனைக்கு தப்பமாட்டோம் என்பது இறைவனை நம்புவோர் அறிந்த ஒன்றே. மேலும் அபாத்திரமாய் செய்யப்படும் எந்த செயலும் முழுப் பலனைத் தருவதில்லை. மன நிறைவையும் பெற இயலாது. மனிதனால் அபாத்திரமாய் செய்யப்படும் ஈனச் செயல்கள், வன்செயல்களுக்காய் இறைவன் மனம் வருந்துகின்றார்.

நமக்கு தரப்பட்டுள்ள பொறுப்புகளை நிதானித்து அறிந்து நடந்து கொள்ளுதல் சிறப்பானதாகும். பாத்திரராய் தாம் நடந்துகொள்ள பணிவு தேவை என்பதை அனுதினமும் உணர்வோம். தன்னை உணர்தல் மிக அவசியமான ஒன்று. தன்னை உணராதவன், தன் வாழ்வின் தீமைகளை உணராதவன், இறைவனின் பந்திக்கு தகுதியற்றவனாகிறான். தகுதியற்ற நிலையை உணர்ந்தும் கடின உள்ளத்தோடு திருப்பந்தியில் இணைகிறவன் கடிந்துகொள்ளப்படுகிறான். அபாத்திரமான செயல்களை செய்யாதிருக்க நம்மை நாம் ஆண்டவருக்குள் நிதானித்து அறிவோம். இறையருள் நம்மை தாங்கி நடத்திடட்டும்.